மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: விவசாயக் கருத்தரங்குகள் இப்போதும் நடந்து வருகின்றன. சில மாவட்டங்களில் முடிவுற்றிருக்கின்றன. சில மாவட்டங்களில் நடைபெற இருக்கின்றன. மீனளத் துறையைப் பொறுத்து, இன்னும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கலாம். ஆனால் ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் இப்போதும் பல மாவட்டங்களில் கூடி அவர்கள் தங்கள் கருத்துக்களை, ஆலோசனைகளை அரசுக்கு அனுப்புகிறார்கள், அரசு அவற்றினை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: "யான்மர்" விசைப்படகுகளைத்தான் அதிகமாக மீனவர்கள் விரும்புகிறார்கள். அதைத்தான் அவர்களுக்கு அதிகமாக விநியோகம் செய்ய வேண்டுமென்று ஏதாவது முடிவு அந்த செமினாரில் எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்தக் கருத்தரங்கில் என்ன பேசினார்கள் என்ற தகவல் இல்லை என்று சொன்னேன். ரீஜனல் எவால்யுவேஷன் ஆபீஸர் அழைப்பின்பேரில் நம் அதிகாரிகள் சென்றிருக்கிறார்கள். தொடக்கத்தில் மட்டும் நம் அதிகாரிகள் இருந்திருக்கிறார்கள். அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள் நம் அதிகாரிகள், யான்மர் என்ஜின் பொறுத்தவரையில் அதைத்தான் மீனவர்கள் விரும்புகிறார்கள். இனி அந்த என்ஜின்கள் நமக்கு வராது என்று கருதுகிறேன். கையிருப்பு என்ஜின்களை எல்லாம் சில பேர்களுக்கு கொடுத்தாகி விட்டது. அந்த என்ஜின்களை தயார் செய்ய அரசு முயற்சி எடுத்திருக்கிறது. அதற்கான ஒரு தளம் அமைக்க வேண்டுமென்று ஜப்பான் அரசோடு தொடர்பு கொண்டு அவர்களின் உதவி கொண்டு யான்மர் என்ஜின்களை தயார் செய்ய ஒரு நிறுவனத்தை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு அதற்குரிய ஒப்புதலுக்கான பதிலைத் தரவில்லை. மாநில அரசு அதை வற்புறுத்திக்கொண்டுதான் வருகிறது.

Visit of 'Wheat associates'

* 95 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether any 'Wheat associates' team from America visited Madras State in December 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) அமெரிக்க கோதுமை பயிரிடுவோர் சங்கத்தின் இயக்குநர் திரு. ஆர். ஏ. ஹண்ட் தலைமையில் ஐவர் கொண்ட குழு ஒன்று 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அமெரிக்காவிலிருந்து இம்மாநிலத்திற்கு வருகை புரிந்தது, இக்குழு சேவா சமாஜம் பெண்கள் பயிற்சிப் பள்ளி, அடையாறு, "கில்டு ஆப் சர்வீஸஸ்"; சென்னை, வலம்வரும் சத்துணவு வளர்ச்சித் திட்டப் பிரிவு ஆகிய இடங்களுக்கு வருகை புரிந்தது. மேலும், 4—12—1969-ல் தென்னிந்திய உருளை மாவு ஆலைகள் சங்க உறுப்பினர்களையும் இக்குழு சந்தித்தது.

1970 ஆகஸ்ட் 28]

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த மாநிலத்தில் கோதுமை உற்பத்தி அதிகரிப்பு சம்பந்தமாக ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? அல்லது மாநில அரசு சார்பில் ஏதாவது பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதா? ஆமெனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது அரசாங்க சார்பற்ற குழு. அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லே . அவர்கள் வந்து சென்ருர்கள். வேறு தகவல்கள் இல்லே.

மதுரை, ஆட்டிறைச்சி சில்லரை விற்பனேயாளர் சங்கத்தின் முறையீடு

* 96 வினு.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு உணவு, வணிக வரித் துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள ஆட்டிறைச்சி சில்லரை விற்பனேயாளர்கள் வெளியிடங்களிலிருந்து வாங்கி வரும் ஆடுகளுக்கு விற்பனே வரி வசூல் செய்யப்படுகிறதென்று மதுரை நகர் ஆட்டிறைச்சி சில்லரை விற்பனேயாளர் மதுரை சங்கம் 20—3—1970 தேதியிட்ட மனுவை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கு சமீபத்தில் அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) அந்த மனு வருவாய்த் துறை வாரியம், வணிக வரி பிரிவின் முடிவுக்கு அனுப்பப்பட்டது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். 93-க்கு அப்புறம் 95-ஆவது கேள்வி எடுக்கப்பட்டிருக்கிறது. 94-வது கேள்வி என்னவாயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலேவர் : வேளாண்மை அமைச்சர் என்று தப்பாக போடப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அதற்கு பதில் சொல்லவேண்டும்.

திரு. டி. மார்டின் : சில்லறையாக இந்தவிதமான ஆடுகள் வாங்கிக் கொண்டு வருகிறவர்களிடம் வரி வசூல் செய்கிருர்கள் என்ற விண்ணப்பத்தை மார்ச் 1970-ல் அரசுக்கு அனுப்பியும்—அது குறித்த விண்ணப்பத்தை ரெவின்யூ போர்டுக்கு அனுப்பியிருக்கிருர்கள் என்று கூறினுர்கள். அந்தவிதமாக வரி வசூல் செய்யாமல் இருக்கும் உத்தரவை மதுரையில் உள்ள வரி வசூல் அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிருர்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபோன்ற உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆடுகள், மாடுகள் போன்ற கால்நடைகளே இறைச்சிக்காக அனுப்புவது என்பதற்கு வரி போடக்கூடாது என்று திட்டவட்டமாக அரசாங்கம் உத்தரவு அனுப்பித்து இருக்